### மக்களின் உயிர் காக்கும் மகத்தான மனித நேயத் தொண்டில்

# மருத்துவர்களின் அர்ப்பணிப்பைப் போற்றுகிறேன்!


## தேசிய மருத்துவர்கள் தினத்தையொட்டி கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் புகழாரம்!

சென்னை, ஜூலை. 2-

மக்களின் உயிர் காக்கும் மகத்தான மனித நேயத் தொண்டில் அர்ப்பணிப்போடு ஈடுபடும் மருத்துவர்கள் அனைவரையும் போற்றுகிறேன் என தேசிய மருத்துவர்கள் தினத்தை முன்னிட்டு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது முகநூல் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

கழகத்தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள முகநூல் பதிவு வருமாறு:-

மக்களின் உயிர்காக்கும் மகத்தான மனிதநேயத் தொண்டில் அர்ப்பணிப்போடு ஈடுபடும் மருத்துவர்கள் அனைவரையும் National Doctors Day இல் போற்றுகிறேன்.




இந்தியாவின் சிறப்பான மருத்துவக் கட்டமைப்பைத் தமிழ்நாடு கொண்டிருப்பதிலும், மருத்துவத் தலைநகராகத் திகழ்வதிலும் நம் மருத்துவர்களின் பங்கு தலையாயது.

NEET போன்ற சதிகளால் இதனைத் தகர்த்திடப் பார்க்கும் முயற்சிகளை வெற்றிகொள்ள இந்நாளில் உறுதியேற்போம்.

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

### விபிஜி ராம்ஜி திட்டம் : மாநிலங்களின் நிதிச்சுமையை அதிகரிப்பதால்

# ஒன்றிய அரசிடம் வலுவான எதிர்ப்பைத் தெரிவிக்க வேண்டும்!

## த.வெ.க. அரசுக்கு முன்னாள் நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு வலியுறுத்தல்!

சென்னை,ஜூலை,2-

“விபிஜி ராம்ஜி திட்டம் மாநிலங்களின் நிதிச் சுமையை அதிகரிக்கும் என்பதால் ஒன்றிய அரசிடம் வலுவான எதிர்ப்பை த.வெ.க. அரசு தெரிவிக்க வேண்டும்” என்று முன்னாள் நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு வலியுறுத்தியுள்ளார்.



மகாத்மா காந்தி 100 நாள் வேலை வாய்ப்பு திட்டத்திற்கு வி.பி.ஜி ராம் ஜி திட்டம் என பெயர் மாற்றம் செய்த திட்டத்திற்கு ஒப்புதல் அளித்த த.வெ.க. அரசுக்கு விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

மகாத்மா காந்தி தேசிய கிராமப்புற வேலை உறுதிச் சட்டத்தை ரத்து செய்து அதற்கு பதிலாக வி.பி.ஜி. ராம்ஜி என்ற புதிய திட்டத்தை ஒன்றிய அரசு கொண்டு வந்தது. இந்த திட்டத்திற்கு த.வெ.க. அரசு எதிர்ப்பு தெரிவிக்காமல், அமல்படுத்தப்படும் என அரசாணை வெளியிட்டது. இது பல்வேறு தரப்பினர் இடையே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

ஒன்றிய அரசின் செயலுக்கு த.வெ.க. அரசு துணை போவதுடன் தொழிலாளிகளை வஞ்சிப்பதாக தெரிவித்தனர். மேலும், இந்த திட்டத்தில் உள்ள குளறுபடிகள் குறித்து த.வெ.க. அரசுக்கு எதுவும் தெரியவில்லை எனவும், மாநிலங்களுக்கான நிதி சுமையை அதிகரிக்க ஒன்றிய அரசு முயற்சிப்பதாகவும், 100 நாள் வேலை திட்டத்தை ஒழிக்க பாஜக துடிப்பதாகவும் பொதுமக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

இந்நிலையில் முன்னாள் நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு தமது முகநூலில் பதிவிட்டிருப்பதாவது:-

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டம் (MGNREGA) செயல்படுத்தப்பட்ட போது, மாநிலங்களின் நிதிச் சுமை கட்டுக்குள் இருந்தது. ஆனால் தற்போது அமல்படுத்தப்பட்டுள்ள VBG RAMG திட்டத்தின் மூலம், மாநில அரசுகள் மீது கூடுதல் நிதிப் பொறுப்புகள் சுமத்தப்பட்டுள்ளன.

கூட்டாட்சியின் அடிப்படை நோக்கமான ஒன்றிய அரசும் மாநில அரசுகளும் பொறுப்புகளை நியாயமான முறையில் பகிர்ந்துகொள்ள வேண்டும் என்ற கொள்கைக்கு மாறாக, மாநிலங்களின் நிதிப் பங்களிப்பை அதிகரித்திருப்பது மாநிலங்களின் வளர்ச்சித் திட்டங்கள் மற்றும் நிதி மேலாண்மையின் மீது கூடுதல் அழுத்தத்தை ஏற்படுத்தும். இது மாநிலங்களின் நிதிச் சுயாட்சியை மேலும் பலவீனப்படுத்தும்.

மாநிலங்களின் நிதிச் சுமையைக் கணிசமாக அதிகரிக்கும் இந்தத் திட்டத்தை எந்தவித எதிர்ப்புமின்றி செயல்படுத்த முனைந்தால் தமிழ்நாட்டின் நிதி நலன்களையும் மாநில உரிமைகளையும் பாதுகாக்கத் தவறியதாகவே அமையும். எனவே, மாநிலத்தின் நலன்களுக்குப் பாதிப்பு ஏற்படுத்தக்கூடிய அம்சங்கள் குறித்து ஒன்றிய அரசிடம் வலுவான எதிர் நிலைப்பாட்டை தவெக அரசு எடுக்க வேண்டும்!

இவ்வாறு முன்னாள் நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு அவர்கள் தமது முகநூலில் பதிவிட்டுள்ளார்.

### நாமக்கல் மாவட்டம் பரமத்தி வேலூர்

# ராஜ வாய்க்காலில் தண்ணீர் திறக்கக் கோரி காத்திருப்பு போராட்டம்!

## இளம் விவசாயிகள் சங்கத்தினர் த.வெ.க. அரசுக்கு எதிராக சாலையில் அமர்ந்து முழக்கமிட்டனர்!

நாமக்கல், ஜூலை. 2-

நாமக்கல் மாவட்டம் பரமத்திவேலூர் அருகே உள்ள ஜேடர்பாளையம் படுகை அணையில் இருந்து ஆண்டுதோறும் 350 நாட்களுக்கு விவசாயம் மற்றும் குடிநீர் தேவைக்காக ராஜ வாய்க்கால் மூலம் தண்ணீர் வழங்கப்பட்டு வந்தது.

இதில் ராஜ வாய்க்காலில் ஆண்டு தோறும் மார்ச் 1 ஆம் தேதி முதல் 15 நாட்களுக்கு தண்ணீர் நிறுத்தப்படுவது வழக்கம்.

பரமத்திவேலூர் சுற்று வட்டார பகுதியான ஜேடர்பாளையம், நஞ்சை இடையாறு பாண்டமங்கலம், மோகனூர் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் 20 ஆயிரத்துக்கு மேற்பட்ட ஏக்கரில் விவசாயிகள் வெத்தலை கரும்பு வாழை கோரை உள்ளிட்டவற்றை பயிரிட்டு வருகின்றனர்.

ஆண்டு முழுவதும் விவசாயம் மற்றும் குடிநீருக்காக தண்ணீர் வழங்கப்பட்டு வந்த நிலையில், கடந்த ஜூன் 17ஆம் தேதி எந்தவித முன்னறிவிப்பும் இன்றி தண்ணீர் நிறுத்தி உள்ளனர் இதனால் சுமார் 20 ஆயிரம் ஏக்கரில் பயிரிடப்பட்டுள்ள ரூ.100 கோடி மதிப்பிலான வெற்றிலை உள்ளிட்ட பயிர்கள் காய்ந்து நாசமடையும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகவும், 20 ஆயிரம் குடும்பங்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படும் நிலை உருவாகியுள்ளது.

எனவே, ராஜ வாய்க்காலில் உடனடியாக தண்ணீர் திறந்து விட வலியுறுத்தி, இளம் விவசாயிகள் சங்கத் தலைவர் சௌந்தரராஜன் தலைமையில் 100க்கும் மேற்பட்ட விவசாயிகள் கடந்த திங்கட்கிழமை பரமத்திவேலூர் தாலுகா அலுவலகம் முன்பு காத்திருப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர். தொடர்ந்து உடனடியாக தண்ணீர் திறந்து விடாவிட்டால் பெரிய அளவில் அரை நிர்வாண சாலை மறியல் போராட்டம் நடத்துவோம் என அறிவித்து நேற்று முன்தினம் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதுகுறித்து தகவல் அறிந்த நீர்வளத்துறை அதிகாரிகள், பரமத்திவேலூர் தாசில்தார் ராஜா, பரமத்தி வேலூர் துணை போலீஸ் சூப்பிரண்டு செந்தில்குமார் (பொறுப்பு) மற்றும் இன்ஸ்பெக்டர் உமாசங்கர் ஆகியோர் சம்பவ இடத்திற்கு வந்து விவசாயிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தினர். அப்போது, நாளை ஜூலை 3ஆம் தேதி முதல் ராஜ வாய்க்காலில் மீண்டும் தண்ணீர் திறக்கப்படும் என்று அதிகாரிகள் உறுதியளித்தனர்.

சுமார் மூன்று மணி நேரம் நீடித்த போராட்டத்தால் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற வெற்றிலை ஏலச் சந்தை மற்றும் ஏற்றுமதி பணிகள் பாதிக்கப்பட்டன. பாதுகாப்பு முன்னெச்சரிக்கையாக 100க்கும் மேற்பட்ட போலீசார் குவிக்கப்பட்டதால் அப்பகுதியில் பரபரப்பு நிலவியது.

இது குறித்து, இளம் விவசாயிகள் சங்கத் தலைவர் சௌந்தரராஜன் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

“ராஜ வாய்க்கால் தண்ணீரை நம்பி வெற்றிலை, வாழை, கோரை உள்ளிட்ட பயிர்களை அதிக முதலீட்டில் சாகுபடி செய்து வருகிறோம். குறிப்பாக வெற்றிலை சாகுபடி ஒரு குழந்தையை வளர்ப்பது போன்றது. தண்ணீர் இல்லாமல் இந்தப் பயிர்களை காப்பாற்ற முடியாது. எந்தவித முன் அறிவிப்பும் இன்றி தண்ணீர் நிறுத்தப்பட்டதால் வெற்றிலை உள்ளிட்ட பயிர்கள் காய்ந்து கருகும் நிலை ஏற்பட்டுள்ளது.

வரும் 3ஆம் தேதி தண்ணீர் திறக்கப்படும் என்று கூறுவது ஏற்றுக் கொள்ள முடியாது. அதற்குள் பயிர்கள் முற்றிலும் காய்ந்து கருகி விடும். எனவே, தமிழக முதலமைச்சர் உடனடியாக தலையிட்டு, ஏற்கெனவே நடைமுறையில் இருந்தபடி ராஜ வாய்க்காலில் ஆண்டு முழுவதும் தண்ணீர் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்” என்றார்.

மேலும், ராஜ வாய்க்காலுக்கு நிரந்தரமாக தண்ணீர் வழங்க மறுக்கும் நீர்வளத்துறை அதிகாரிகளை கண்டித்தும், உடனடியாக ராஜ வாய்க்காலில் தண்ணீர் திறக்க வலியுறுத்தியும், (செவ்வாய்க்கிழமை) காலை பரமத்தி வேலூர் காவிரி பாலம் அருகே உள்ள பைபாஸ் சாலையில் விவசாயிகளை திரட்டி அரைநிர்வாண சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட உள்ளதாகவும் சௌந்தரராஜன் தெரிவித்தார்.



நாமக்கல் மாவட்டம் பரமத்தி வேலூர் ராஜ வாய்க்காலில் தண்ணீர் திறந்து விடக் கோரி விவசாயி சௌந்தரராஜன் தலைமையில் 200க்கும் மேற்பட்ட விவசாயிகள் பரமத்தி வேலூர் 4 ரோட்டில் அரை நிர்வாண சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

### சட்டமன்றத்தில் அப்பாவைக் காணோம் என்று தேடினார்கள்!

# மக்களின் இதயங்களில் இருந்து கழகத் தலைவரை யாராலும் பிரிக்க முடியாது!

## லால்குடியில் முன்னாள் அமைச்சர் கே.என்.நேரு பேச்சு!

திருச்சி, ஜூலை. 2-

திருச்சி மாவட்டம் லால்குடியில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 103 வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு பொதுக்கூட்டம் நடைபெற்றது.

இந்த பொதுக்கூட்டத்தில் தமிழ்நாடு சட்டமன்ற எதிர்க்கட்சி துணைத் தலைவரும், கழக முதன்மைச் செயலாளரும், முன்னாள் அமைச்சருமான கே.என். நேரு, மற்றும் கழக செய்தி தொடர்புக் குழு துணைத் தலைவர் மருது அழகுராஜா ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர்.



இந்த பொதுக்கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் கே.என்.நேரு சிறப்புரையாற்றுகையில்...

லால்குடியில் நாம் ஏன் தோற்றோம் என்பது இன்று வரை என்னால் புரிந்து கொள்ள முடியாத புதிராகவே உள்ளது. நம்மளை எதிர்த்துப் போட்டியிட்ட அதிமுக வேட்பாளரை எதிர்க்கக் கூடிய அளவிற்கு நம்மிடம் பணபலம் இல்லை. அவர்கள் பெரும் பணபலத்துடன் தேர்தலை எதிர்கொண்டனர்.

தி.மு.க. ஆட்சியில் கொண்டுவரப்பட்ட பிரம்மாண்ட வளர்ச்சித் திட்டங்களை மட்டுமே வைத்து நாம் தேர்தலில் வெற்றி பெற்றுவிடுவோம் என்று எதிர்பார்க்கக் கூடாது. பொதுமக்களுக்கு எவ்வளவு நன்மைகள் செய்திருந்தாலும், மக்களுடனான தொடர்பில் ஏதேனும் தொய்வு ஏற்பட்டிருக்கலாம். எனவே பொதுமக்களின் நன்மதிப்பைப் பெற தொடர்ந்து அவர்களோடு நாம் இணைந்து பணியாற்ற வேண்டும் என்று வலியுறுத்தினார்.

இப்போது புதுசு புதுசாக யார் யாரோ வருகிறார்கள், ஏதேதோ அரசியல் பேசுகிறார்கள். நம்மை அழித்துவிட்டதாக அவர்கள் நினைத்துக் கொள்கிறார்கள். ஆனால், அதெல்லாம் ஒன்றும் இல்லை, தி.மு.க.வை யாராலும் அசைக்க முடியாது என்றார். 1980, 1984 மற்றும் 1989 முதல் லால்குடியில் தொடர்ச்சியாக திமுக பெற்ற வெற்றிகளையும், 2001ல் ஏற்பட்ட தோல்விக்குப் பின் 2006ல் மீண்டும் பெற்ற வெற்றியையும் நாம் பார்த்திருக்கிறோம். எவ்வளவு ஆண்டுகள் ஆனாலும் முத்தமிழறிஞர் கலைஞரின் புகழை யாராலும் மறைக்க முடியாது.கலைஞர் மற்றும் தற்போதைய முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ஆட்சியில் தலா 250 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இரண்டு பெரிய கூட்டுக் குடிநீர் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன. கலைஞர் காலத்தில் 4 மின் துணை நிலையங்கள், சாலை மேம்பாடுகள், விவசாய மற்றும் பாலிடெக்னிக் கல்லூரிகள் கொண்டுவரப்பட்டன. பைபாஸ் சாலை மற்றும் அன்பில் பாலம் போன்ற உள்கட்டமைப்புகளால், அன்று ஏக்கர் 2 முதல் 4 லட்சத்திற்கு விற்ற நிலங்கள் இன்று கோடிக்கணக்கில் உயர்ந்துள்ளன என்றார்.

2 லட்சத்திற்கும் அதிகமான வாக்காளர்களைக் கொண்டு விரிவடைந்துள்ள லால்குடி தொகுதி, தற்போது திமுக ஆட்சியில் நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது. புதிய பேருந்து நிலையம் அமைக்கப்பட்டுள்ளதுடன், நூற்றுக்கணக்கான கோடி ரூபாய் மதிப்பில் பல்வேறு உள்கட்டமைப்பு மற்றும் வளர்ச்சிப் பணிகள் மிகத் தீவிரமாக நடைபெற்று வருகின்றன

சட்டமன்றத்தில் அப்பாவைக் காணோம் என்று கிண்டலாகச் சொன்னார்கள். ஆனால், அவரை உங்களால் ஒருபோதும் மறைக்க முடியாது. மக்களின் இதயங்களில் அவர் நிறைந்திருக்கிறார்.

இந்தக் கழகம் மீண்டும் எழுச்சிபெறும். வரவிருக்கும் தேர்தலில் லால்குடி தொகுதி மட்டுமின்றி, திருச்சி மாவட்டத்தின் அனைத்து தொகுதிகளிலும் திமுக நிச்சயமாக மிகப்பெரிய வெற்றியைப் பெறும். மீண்டும் இந்த கழகத்தின் ஆட்சி அமையும், மீண்டும் நம்முடைய தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களே முதலமைச்சராக வருவார் என்று உறுதியளித்தார்.

இந்த பொதுக்கூட்டத்தில் மத்திய மாவட்ட செயலாளர் வைரமணி, மாநகர செயலாளர் மேயர் அன்பழகன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சௌந்தரபாண்டியன், லால்குடி நகராட்சி தலைவர் துரை, சித்ரா ஹோட்டல் பாரிவள்ளல் துரை கந்தசாமி இளைஞரணி அமைப்பாளர் லால்குடி சூர்யா, உட்பட ஒன்றிய செயலாளர்கள் கழக நிர்வாகிகள் உள்ளிட்ட ஏராளமான கழக தொண்டர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.


### அரசியலமைப்புச் சட்டத்தை மீறி அரசுக்குத் தொடர்பில்லாத நபர்களை அரசுக் கூட்டத்தில் அனுமதித்த

# முதலமைச்சர் விஜய் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்!

## காவல்துறை தலைமை இயக்குநரிடம் – ஆர்.எஸ்.பாரதி புகார் மனு!

**சென்னை, ஜூலை 2–**

**முதலமைச்சராக பதவி ஏற்கும் பொழுது அரசின் ரகசியங்களை காப்பேன் என உறுதிமொழி ஏற்ற முதலமைச்சர் விஜய் தற்போது தனியார் நபர்களை அரசு நிகழ்ச்சிகளில் அனுமதித்து அரசு ரகசியங்களை அவர்களிடம் தெரிவிப்பது ஏன் ? என, கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி கேள்வி எழுப்பியுள்ளார்.**



அதன் விவரம் வருமாறு:

மக்களிடையே போதுமான பெரும்பான்மையை பெறாமல் மைனாரிட்டியோடு அமைக்கப்பட்டுள்ள விஜய் ஆட்சி தொடர்ந்து பல்வேறு தவறுகளைச் செய்துகொண்டிருக்கிறது.

குதிரை பேரம் நடத்தி வருகிறது தவெக அரசு. ஒரு கட்சியின் சார்பில் வெற்றி பெற்றுவிட்டு பதவிக்காக ஆளுங்கட்சிக்கு போவது இதுவே முதல்முறை. குதிரை பேரத்தில் தொடங்கிய இந்த விஜய் ஆட்சி பல்வேறு தவறுகளை செய்துகொண்டிருக்கிறது. விஜய்க்கு ஆட்சி செய்ய தெரியவில்லை என்றால் யாரிடம் ஆவது டியூஷன் சென்று கற்றுக் கொள்ள வேண்டும். ஆனால் அதற்காக அரசுக்கு தொடர்பில்லாத ஜான் ஆரோக்கியசாமி மற்றும் விஷ்ணு ரெட்டி ஆகிய தனியாரிடம் அரசின் நடவடிக்கைகளை மேற்கொள்ள விட்டுவிடுவது ஏற்புடையதல்ல.

தமிழர்களே அல்லாத இவர்கள் எந்த முறையில் கூட்டத்தில் பங்கேற்கிறார்கள். ஜான் ஆரோக்கியசாமி மற்றும் விஷ்ணு ரெட்டி ஆகியோர் அமைச்சரவை கூட்டத்திற்கும் அரசு சார்பில் நடத்துகிற அனைத்து கூட்டத்திற்கும் எப்படி கலந்துகொண்டிருக்கிறார்கள். விஜய் முதலமைச்சராக பதவியேற்கும் பொழுது ரகசிய காப்புரிமை எடுத்துக் கொள்கிறார். ஆனால் அரசின் அனைத்து நடவடிக்கைகளையும் இவர்களுக்கு தெரியப்படுத்துகிறார். குறிப்பாக முதல்வரின் அறைக்கு அருகிலேயே இவர்களுக்கு அறை ஒதுக்கப்பட்டுள்ளது. முதல்வரின் அனைத்து அரசு நிகழ்ச்சிகளிலும் இவர்கள் கலந்து கொள்கின்றார்கள். இவர்கள் அரசு கூட்டங்களில் பங்கேற்பது கண்டனத்திற்குரியது. அவர்கள் மீது மற்றும் அவர்களுக்கு அனுமதி அளித்த முதல்வர் மீதும் காவல்துறையானது நடவடிக்கை எடுக்க வேண்டி காவல்துறை தலைமை இயக்குனருக்கு கோரிக்கை விடுத்துள்ளோம். அவர் நடவடிக்கை எடுக்க தவறும் பட்சத்தில் நீதிமன்றத்தில் வாயிலாக இதற்கு சட்டரீதியாக நடவடிக்கை மேற்கொண்டு நீதியை பெறுவோம்.

இவ்வாறு ஆர்.எஸ்.பாரதி தெரிவித்துள்ளார்.

### நாமக்கல் மேற்கு மாவட்டம்

# மல்லசமுத்திரம் அ.தி.மு.க.வினர் கழகத்தில் இணைந்தனர்!

## கே.எஸ்.மூர்த்தி முன்னிலையில்!

நாமக்கல், ஜூலை 2-

நாமக்கல் மேற்கு மாவட்டம், மல்லசமுத்திரம் ஒன்றியத்தில் செண்பகமாதேவி ஊராட்சியைச்சேர்ந்தஅ.தி.மு.க.வினர் தி.மு.க.வில் இணைந்தனர்.

செண்பகமாதேவி ஊராட்சிஅ.தி.மு.க.கிளைச் செயலாளர் ஆர்.செல்வகுமார் தலைமையில் இளைஞர் அணி துணைத் தலைவர் ஆர்.சிவக்குமார் மற்றும் கிளைச் செயலாளர்கள் வி.மூர்த்தி, கே.குமார், ஆறுமுகம், மாதேஸ்வரன், மாரியப்பன்உள்ளிட்டோர் நாமக்கல் மேற்கு மாவட்ட செயலாளரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான கே.எஸ்.மூர்த்தி முன்னிலையில் தி.மு.க.வில் தங்களை இணைத்துக் கொண்டனர்.

நிகழ்ச்சியில் ஒன்றிய செயலாளர்கள்சுந்தரம்,பழனிவேல், திருச்செங் கோடு தெற்கு ஒன்றிய செயலாளர் தாமரைச்செல்வன் மற்றும் வெங்கடேஷ், பிரகாஷ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.




நாமக்கல் மேற்கு மாவட்டம், மல்லசமுத்திரம் ஒன்றியத்தில் செண்பகமாதேவி ஊராட்சியைச் சேர்ந்த அ.தி.மு.க.வினர் கே.எஸ்.மூர்த்தி முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர்.